# நிலைக்கண்ணாடி

என்னுடைய கை மணிக்கட்டிற்கு ஜன்னற் கண்ணாடித் துகள்களால் காயம் ஏற்பட்டு நான் சிலவாரங்கள் துன்பப்பட நேர்ந்தபோது, "ஆஹா! இதே கண்ணாடி வேறுவித நிலைகளில் வேறுவித உருவங்களில் உருவங்காட்டும் கண்ணாடியாகவும், அழகிய பண்டம் பாத்திரங்களாகவும் எப்படி மனங் கவருகிறது! உபயோகப்படுகிறது? . . . இப்போது இது செய்யும் துன்பம் எத்தகையது?" என்று குட்டி யோசனை செய்தேன் ஒரு நாள்.

ஆனால் இந்த அனுபவத்திற்கு அப்புறம் எனக்கு வேறொரு அனுபவம் ஏற்பட்டபோது, என்னவென்பேன் என் மனநிலையை?

முகம்பார்க்கும் கண்ணாடி அல்ல, முழு உருவங்காட்டும் அழகிய நிலைக்கண்ணாடி. என் சிநேகிதி ஜானுவின் வாழ்க்கையைப் புரட்டிப் புண்படுத்தி அவளைத் துன்பத்திற்குள்ளாக்கிய வரலாறு அறிந்தபோது என் மனங்கொண்ட வேதனையை எப்படி விவரிப்பேன்?

ஒன்றல்ல. இரண்டல்ல ஆறு வருடங்கள் நடத்திய மண வாழ்க்கைக்குப்பின் நான், என் கணவருடன் என் தாய்நாடான தமிழ்நாடு வந்தேன். திருமணத்திற்குப் பின்னர் முதன் முதலாகப் பிறந்தகம் வந்திருந்தேன்.

"மறுபடியும் சந்திப்போமா?" என்று யாரைப் பற்றி நான் எண்ணற்ற தடவைகள் எண்ணியிருந்தேனோ, அவள் ஜானு. நான் அங்கு வந்த சமயத்திலேயே அவளும் தன் பிறந்தகம் வந்திருப்பாள் என்று நான் நினைக்கவேயில்லை கணவருடன் எங்கு இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்று ஒரு தகவலும் அவளைப் பற்றி அறிந்திருக்கவில்லை, நான்.

"அவளும் இருக்கிறாள் இந்த ஊரில்!"

ஓடோடிப் போனேன், அவளைக் காண்பதற்கு. அவளும் என்னைப் போன்றவள்.

அடங்கிப் போகாத ஆவலுடன் குரலில் பூரிப்பு எழ, "ஜானு!" எனக் கூவிவிட்டேன்.

"சுசியா! . . . வா!" என்றாள் ஜானு அவள் அளித்த வரவேற்பு ஆழ்ந்த அன்பும் பரிவும் நிறைந்ததாகவேயிருப்பினும், இருந்த இடத்திலிருந்தே சிறிதும் சுறுசுறுப்புக் காட்டாமல் எப்படியோ அவள் அளித்த அந்த வரவேற்பு என்னமோ போல் இருந்தது எனக்கு.

'என்ன ஜானுவா? துருதுருவென்ற சுபாவம் கொண்ட ஜானுவா என்னை - பல வருஷங்களுக்குப் பிறகு பார்க்கும் என்னை - இப்படி உணர்ச்சிவற்றி மகிழ்ச்சியின்றி வரவேற்கிறாள்? முகத்திலே பொலிவு அகமகிழ்ச்சிக்கு எப்படி எடுத்துக்காட்டாமோ, அதுபோலவே முக அழகின் சிதைவு மனக்கிலேசத்திற்கு அத்தாட்சியல்லவோ?'

ஒரே வினாடியில் இப்படி எண்ணிவிட்டாலும் அடுத்த வினாடி அவளழகு ஆர்வமும் குதூகலமும் பொங்கும் வண்ணம் அமர்ந்துவிட்டேன்.

"வந்துட்டேண்டி ஜானு! அப்பா! எத்தனை காலமாச்சுடிம்மா நாம் சந்திச்சு!" என்று படபடத்தேன் மகிழ்ச்சியால்.

"ஆமாம்!" என்றாள் நிதானமாக. பிறகு ஒரு வினாடி கருவட்டங்கொண்டிருந்த தன் கண்கள் வெறித்துப் பார்ப்பதுபோல குத்திட்டு நோக்கி, "ஆறேழு வருஷமாயிருக்கும்!" என்றாள்.

அப்புறம் நடந்தது எங்கள் சம்பாஷணை. ஒருவித நிதானமுடன் பல பல கேள்விகள் அவள் என்னைக் கேட்டாள். ஆனால், அவள் நெஞ்சிலே சீவன் இல்லை, குரலிலே சுரத்து இல்லை இலையுதிர்ந்த மரம்போல காணப்பட்ட அவளை, "நீ ஏன் இப்படி இருக்கிறாய்!" என்று வினவ என் வேதனை மனம் உந்தியது. ஆனால் நானே மரமானேன் அந்த விஷயத்திலே.

இறுதியில் நான் சொல்லக் கூடிய விஷயங்கள் தீர்ந்துபோய் நான் கேட்கவேண்டிய விஷயங்கள் எஞ்சி நிற்கவே, துணிந்தேன். நான் கொடுத்த தகவல்களுக்கும் விடைகளுக்கும் எதிர் மரியாதை பெற்றுக்கொள்ளாமல் போய்விட, என் 'சம' உணர்ச்சி ஒப்பவில்லை 'சம்பந்தி' உணர்ச்சியைவிட அதிக தீவிரமாக இருந்த என் 'சம' உணர்ச்சிக்கு நேர்மையாகவும் தோன்றவில்லை; கேட்டேவிட்டேன்.

அவளும் ஒளிக்கவில்லை எதையும். தன் பேதை மனதைத் திறந்து காட்டினாள் பொன் வைக்கும் இடத்திலே பூ வைத்தாள், ஆம்! அவள் சொன்ன விவரம், அவளுடைய மனத்துயரிலே ஒரு பகுதியாவது குறைந்திருக்குமா அப்போது? ஏதோ அவள் மனத்துயருக்குக் காரணங் கூறியதே தவிர ஆறுதல் என்ன அளித்திருக்கக்கூடும் அன்றைய நிலையிலே?

சொன்னாள் ஜானு, என்னைப் பார்க்க முடிந்ததில் ஆறுதல்தான் என்று. ஆனால், 'நாம் இப்படிச் சந்திக்க வேண்டுமா, சுசீ!" என்று தான் ரொம்பவும் சிறுமையும் வருத்தமும் கொண்டாள்.

"நீ வந்திருப்பதுபோல நானும் பிறந்தகம் வந்திருக்க நேர்ந்து, இந்தச் சந்திப்பு நடந்திருந்தால், அது ஒரு பாக்கியமாகவும், கடவுள் அருள் போலவும் தோன்றியிருக்கும் ஆனால் இப்போது. பிறந்தகத்தோடு கிடக்கும் என்னை நீ பார்க்க நேர்ந்தது விசேஷமாகுமா? இப்போது உனக்கும் வருத்தம், எனக்கும் தலையிறக்கம்!" என்றாள் ஜானுவே, வெளிப்படையாக.

"என்ன நடந்தது சொல்லேன் ஜானு!" என்று முடுக்கினேன்.

"அவர் என் மாங்கல்யத்தை நிலை நிறுத்திக்கொண்டுதான் இருக்கிறார். அந்த மட்டும் நான் பாக்கியசாலிதான், சுசீ! ஆனால் இந்தப் பரந்த உலகிலே ஒரு சாண் இடம் இருந்தாலும் சேர்ந்து வாழவேண்டிய நாங்கள், மூலைக்கொருவராகிவிட்டோம்!' என்றாள் அந்த பாக்கியசாலி, முத்துக்களைக் கண்களிலிருந்து உதிர்த்துக்கொண்டே.

"அப்படியென்றால் அவர் எங்காவது சண்டையில் சேர்ந்துவிட்டு, திரும்பவேவேயில்லையா? . . . அல்லது... ஜானு . . . "

"சுசீ! நிஜமாகப் புரியவில்லையா? அல்லது கேட்கத் தயக்கப்படுகிறாயா? . . . அவரோடு வாழும் பேறு இனி எனக்கு இல்லை என்று அவராலேயே துறக்கப்பட்டுவிட்டேன்! ஆறேழு மாசம்தானாச்சு இது தெரிந்து! . . . ஆனால் யுகங்கள் மாதிரியிருக்கிறது சுசீ! நீயும் நானும் பிரிந்து வருஷங்கள் ஆனாலும், அது அப்படியொன்றும் பிரமாதமாகத் தோன்றமாட்டேனென்கிறதே இப்பவும்! நானும் அவரும் ரொம்பவும் ஒற்றுமையாய்த்தான் இருந்தோம் சுசீ! இரண்டு பேருக்கும் அப்படியொன்றும் பிரமாதமான மனத்தாங்கலே கிடையாதே இப்படி நடக்க! அதான் சுசீ! வேதனை அடங்கவே மாட்டேனென்கிறது!" என்று விம்மினாள் அவள்.

"என்ன காரணத்தினால் இந்த தண்டனை என்பது கூடவா உனக்குத் தெரியாது? அவர் சொல்லவில்லை? . . அந்தோ, நீ குமைவது இத்தகைய பெரும் வேதனையாலா, ஜானு!" எனப் பதறிப்போனேன்; வினவினேன் அவளை.

"தெரியும் கொஞ்சம்! . . . அதுவாத்தான் இருக்கும்!" என்றாள் ஜானு விக்கின வண்ணம்.

"தெரியுமா? கொஞ்சமாவது தெரியுமா . . . சொல்!" என்றேன்.

"உன்னிடம் சொல்லத்தான் போகிறேன் சுசீ! நீயே சொல், யார் செய்த தவறு, என்ன தவறு என்று நீயே சொல்! என்னைக் கேட்டால் சிறு வயசிலிருந்து என்னைப் பிடித்திருந்த கண்ணாடிப் பித்துதான் என்று சொல்வேன்!" என்றாள்.

"கண்ணாடி ஆசையா?" என்று திடுக்குற்றேன் நான்.

"ஆம்" என்று ஜானு விளக்கிவிட்டாள் விஷயம்.

என் ஜானுவும் காலக்கோளாறு செய்த சதியால் வாழ்வு குலைந்தாள். முகம் பார்க்கும் கண்ணாடி என்றால் அவளுக்கு இருந்த ஆசை, அவளுடைய கண்ணாடிப் பித்து, அவளுடைய குடும்பத்திலே புரைசல் கிளப்பி அவளுடைய இன்ப வாழ்வுக்கு மோசம் செய்தது.

அந்த எங்கள் பள்ளி வாழ்க்கையிலே... ஒரு நாள் கடந்த அந்த விளையாட்டுச் சம்பவமும், இன்று எங்கள் கண் முன்னே கொக்கரிக்க இந்தப் பயங்கர சம்பவமும் இரண்டுமே, 'கண்ணாடி' யை ஒட்டியவைதான். ஆனால் . . . ?

அன்று . . .

பள்ளிக்கூட வராந்தாவில் நாங்கள் ஐந்தாறுபேர் கும்மாளமாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

ஆசைக்காக மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு கண்ணைக் கெடுத்துக்கொண்டு விட்ட கோமதியை ஒட்டி ஏற்பட்டது அந்தப் பேச்சு என்பதனாலோ இந்த விபரீதம் ஜானுவுக்கு ஏற்பட்டது!

"எனக்கு மூக்குக்கண்ணாடி ஆசையில்லையடியம்மா? முகம் பார்க்கும் கண்ணாடிதாண்டியம்மா ஆசை! சின்ன வயசிலிருந்தே கண்ணாடிக்கெதிரே நின்றால் எனக்குப் பொழுது போவது தெரியாது! எங்கள் மாமா வீட்டில் பெரிய நிலைக்கண்ணாடி பீரோ இரண்டு உண்டு! அதான் பழக்கம், ஆசை பிடிபட்டுப் போச்சு! இரண்டு கண்ணாடிகளை எதிரும் புதிருமாக வச்சு நடுவில் நாமாவது நின்று, இல்லை, ஏதாவது பண்டத்தையாவது வைத்துப் பார்த்தால், எவ்வளவு உருவங்கள் தெரியும். உனக்குத் தெரியுமா?..... ரொம்ப ஜோராயிருக்கும்! கவனிக்க, கவனிக்க, சுவாரஸ்யமாயிருக்கும்!" என்றாள் ஜானு.

"ஓஹோ, உன்னைப் பிறந்தது முதலே கண்ணாடிக்கு எதிரில் நிறுத்தி, விளையாட்டுக்காட்டி பழக்கிவிட்டார்களாக்கும்! நல்லவேளையடிம்மா! கண்ணாடிக்கெதிரில் குழந்தைகளை நிறுத்தினால், ஊமையாகிவிடும் என்பார்களாம்! இப்போதே மூச்சு விடாமல் பேசுகிறவளாச்சே நீ! உன்னைச் சிறுவயசில் கண்ணாடிக்கு முன்னே பழக்கியிராவிட்டால் இன்னும் எப்படி இருந்திருப்பாயோ!" என்று நான் சொன்னேன், பேச்சிலே கொஞ்சமும் பின் வாங்காமல்.

பக்கத்திலிருந்த சுதா, "இப்போ மழை பெய்து ஓய்ந்த மாதிரியிருக்கு அவள் பேசி நிறுத்தினால்! அப்போ புயல் அடிச்சு ஓய்ந்த மாதிரி இருக்கும்! அவ்வளவுதான்!" என்று ஒரு போடு சளைக்காமல் போடவே, ஜானு உள்பட நாங்கள் எல்லோரும் சிரித்துச் சிரித்து ஓய்ந்தபோது சுதாவின் பேச்சுக்கு நிதர்சனம் ஏற்பட்டுவிட்டது.

மறுநாள் ஜானு பள்ளிவரும்போது தன் கண்ணாடிப் பித்துக்கு நிதர்சனம் காட்டினாள். அவளுக்குப் பாராட்டு கூறும்வகையில் "உனக்குக் கல்யாணத்திற்கு ஒரு ஜோடி கண்ணாடி பீரோ கிடைக்கட்டும்" என்று வாழ்த்தினோம் "நீயும் அவரும் அந்த இரண்டு கண்ணாடிகளுக்கு நடுவில் நின்றால், 'நம்மைப்போல எத்தனையோ தம்பதிகள்!' என்ற நினைவு வரும்! எங்களைப்போல தம்பதிகள் கிடையாது' என்ற பெருமை கூட ஏற்படும்!" என்றாள் சுதா!

அன்று எங்களுக்கு இன்பமூட்டும் வகையில் அமைந்த 'கண்ணாடி ஆசைப் பேச்சு, நேர்த்தியான கண்ணாடி போன்றது. இன்றோ பலவித பூத உருவங்களைக் காட்டி நம் உருவைக் கண்டு நமக்கே அருவருப்புக் கலந்த அதிசயம் உண்டாக்கச் செய்யும் பயங்கர அதிசயக் கண்ணாடி போல இருந்தது. எங்கள் 'கண்ணாடி ஆசைப்' பேச்சின் தன்மை.

அவளுடைய மணவாழ்க்கையில் அந்த 'ஆசை' செய்துவிட்ட பயங்கர விளைவு கண்டு திகைத்து அதிசயிக்காமல், பின் எப்படி இருப்பது?

அப்புறம் - மணவாழ்க்கை ஜானுவுக்கு ஆரம்பமானபோது -

'ஆசைப்பண்டத்தை அன்புக்கணவர் வாங்கித் தருவார்! அவசியமானவற்றை அப்பா கொடுத்திருக்கிறார் அல்லவா?' என மனம் தேறி புக்ககம் போனவள் ஜானு.

கல்யாணமாகி புக்ககம் போகும்போது கட்டாயம் நிலைக்கண்ணாடி பீரோ ஒன்று சீருடன் வேண்டும், கிடைக்கும் என்று அவள் உண்மையாகவே ஆசைப்பட்டது நிறைவேறவில்லை புக்ககத்தாருக்கு அவசியமாகத் தோன்றக்கூடிய சீர் வரிசையையே குறைவின்றி அளிப்பதற்குச் சிரமப்பட்டாராம் நோய் வாய்ப்பட்டிருந்த அவள் தந்தை. நிலைக்கண்ணாடி கிடைப்பது தடைபட்டுப் போயிற்று; ஆனால் மனம் தேறினாள் அவள்.

கணவனுக்கு பட்டணவாசத்திலே வேலையாகி குடித்தனம் துவங்கி வந்த அந்த சுதந்திரமான இன்ப வாழ்க்கையில்தான் எங்கோ விரிந்து பதிந்துபோன கண்ணாடி ஆசை வெளிப்பட்டும், வெளிப்படாமலும் முளைத்தெழுந்து தொல்லைப்படுத்தத் தொடங்கியது.

ஒரு பொருட்காட்சிச்சாலையில் பார்த்தாளாம் அவள். அந்தப் புது தினுசு நிலைக்கண்ணாடியை அங்கேயே நிலை காண முடியாத ஆர்வத்துடன் சொன்னாளாம் கணவனுக்கு. தன் மனம் அதிலே ஈடுபட்டதை வீட்டுக்கு வந்தும் சொன்னாள்; இரவு முழுதும் அதன் நினைப்புத்தான்.

ஆள் உயரத்திற்கு நீண்டு நிமிர்ந்த பளபளப்பான கண்ணாடி. அதையொட்டினாற்போல, முன்பக்கம் அலங்காரக் கருவிகள் வைக்க இடம். இருமருங்கும் இரண்டு பீப்பாய்கள், வைத்தாற்போல இடம். ஒரு பக்கம் பூச்செண்டு கொண்ட புஷ்பக் கூடை வைக்கலாம்; மற்றொரு பக்கம், திருமணப் போட்டோ வைக்கலாம். எதிரே உட்கார தனி முக்காலி; அதன் மீது கண்ணாடிக்கெதிர் உட்கார்ந்துவிட்டால் சினிமாக் காட்சிகளில் ராஜகுமாரிகளின் அலங்காரக் காட்சி தோற்றுவிடும் என்று எண்ணினாளாம்.

மறுநாள் கணவனிடம் தன் ஆசையைச் சொன்னாளாம் "பணம் வேண்டாமா! இருநூற்றைம்பது என்றானே!" என்று கேட்டாராம் அவர்.

ஆசையால் கவ்வப்பட்ட ஜானு "நான் ஊரிலே இரண்டு மூன்று மாசம் போய் இருக்கிறேன். குடித்தனச் செலவு இல்லாவிட்டால் அதற்குள் பணம் சேர்ந்துவிடாதா?" என்று கூறினாள்.

'எத்தனை ஆசை!' என்று கணவன் அறியவேணும் என்று அவள் அப்படிக் கூறியது பலனளித்தது! ஒரு கூர்ந்த பார்வை பார்த்தானாம் கணவன். எத்தனை உரம் பெற்றது அவளுடைய ஆசை என்பதை அவளுடைய முகத்திலிருந்து கிரகித்துவிட்டதுபோல், மறுநாளே கண்ணாடிக்கு அவர் ஆர்டர் கொடுத்துவிட்டார்.

கண்ணாடியை வைக்கத் தகுந்த இடம் பார்த்துப் பொறுக்குவதிலே முனைந்த அவளை, "என்ன வீட்டையே இடித்துக் கட்ட பிரயத்தனமோ?' என்று அவள் கணவர் பரிகாசம் செய்தார்.

கண்ணாடி வந்தது; பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டு வந்தது. அதைப் பொருத்தி நடு ஹாலில் ஒரு பக்கமாக அமர்த்தினாள் ஜானு.

"விலை இருநூற்றைம்பது ஆனாலும் என்ன! என்ன அழகு. புது தினுசு! வீட்டுக்கு லட்சணமாக இது ஒன்று போதுமே! வேறே மரச் சாமான்கள் கூட வேணுமா?" என்றாள் ஜானு.

"ஓஹோ! அப்படியா?' என்று மட்டும் சொன்னார் அவள் கணவர். கண்ணாடிப் பொருத்தி வைக்கும் போதுகூட வேறொன்றும் அவர் சொல்லவில்லை.

சிறு வயதில் ஊன்றியிருந்து, இடைக்காலத்தில் மறைந்து கிடந்த கண்ணாடி ஆசையெல்லாம் திரும்பிவிட்டது அவளுக்கு. பழைய குழந்தைத்தன்மையை அடைந்திருந்தாள். கொஞ்சநாள் கணவன் அவளைப் பரிகாசம் செய்யத் தொடங்கியிருந்தானாம் கண்ணாடியைச் சாக்கிட்டு, ஜானு கூப்பிட்டக் குரலுக்கு ஓடி வராவிட்டாலும், தான் உள்ளே காரியமாகவேயிருந்து வராதிருப்பினும், "கண்ணாடிக்கெதிரில் இருக்கிறாயோ, ராணியம்மா!" என்று கேட்பானாம்.

ஜானுவும் "எனக்கு என்றைக்குமே கண்ணாடி என்றால் ஆசைதான். எங்கள் ஊரில் கேட்டுப்பாருங்கள்!" என்றும், "புதுக்கண்ணாடியென்றால் ஒரு தடவைக்கு இரண்டு தடவை பார்த்துக்கொள்ளத்தான் தோன்றுகிறது!" என்றும் சிரித்துக் கொண்டே சொல்வாளாம். ஆனால் கணவனின் பரிகாசப் பேச்சு நிஷ்டூரப் பேச்சாக மாறி வர ஆரம்பித்தது. அதுநாள் வரை சிடுசிடுப்புக் காட்டாத புருஷன், சுருக்சுருக்கென்று பேசி, ஏசத்தொடங்கினான்!

"ஓஹோ! எத்தனைக்கெத்தனை கண்ணாடிகள் அதிகம் இருந்தால் அத்தனைக்கத்தனை ஷோக்காயிருக்குமா? நரகம்னு சொல்லு! சதா தன்னைத் தானே பார்த்துக்கொள்வது, தன்னைப்பற்றியே நினைச்சுண்டிருக்கிறது, பிறத்தியார் நினைப்பு இல்லாமல் எங்கே கண்ணாடியைக் கண்டால் அங்கே முகத்தை நீட்டுவது, எல்லாம் ரொம்ப நல்ல குணம், ரொம்ப ஸ்வர்க்கம்! 'தான் என்பது போனால் சொர்க்கம்,' என்று பெரியவர்கள் சொன்னார்கள்! நீ அதற்கு நேர்மாறாகச் சொல்லு. புத்தி கெட்டவளே?' என்று சீறினாள் ஒருநாள்.

"பிறத்தியார் பார்த்துமெச்சணும் உன் அழகை! நீயே பார்த்துக் கொள் புகழ்ந்துகொள், பீற்றிக்கொள், நீதான் அழகுசுந்தரி என்று!" எனக் கடுகடுத்துக் கொண்டிருக்கிறான் மற்றொரு சமயம்.

ஒருநாள் அவனுக்குக் குடிக்கப் பாலை எடுத்துக்கொண்டு வந்து கொண்டிருந்தவள், வழியில் இருந்த கண்ணாடியை ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு வந்ததற்கு, "இரா வேளை கண்ணாடியில் பார்த்தால் என்ன ஆவார்கள் தெரியுமோல்லியோ? இப்போ நீ குலுக்கிண்டு மினுக்கிண்டு அழகு பார்த்துண்டுவந்தாற்போல வருகிறவா என்ன ஆவார்களோ, அப்படித்தான்!" என்று எரிந்து விழுந்திருக்கிறான்.

கணவனின் பரிகாசத்திற்கு பயந்து ஜாக்கிரதையாக இருக்கத் தொடங்கியிருந்தாள் ஜானு. கண்ணாடியெதிரில் ஒரு நாழி உட்கார்ந்து தலை பின்னிக் கொள்ளாமல், பூ முடிய அதிகம் நேரமாக்காமல், அவன் பேச்சைத் தவிர்க்க முயன்றாள் அவள். அதனால் கண்ணாடியையும் தவிர்த்தாள் அப்படியிருக்க, அவனுடைய கடுகடுப்பு குறையாமற் போகவே, "ஐயோ, ஏனிப்படி பேசுகிறார்? எவ்வளவோ குறைந்துவிட்டதே என் கண்ணாடிப் பித்து! முன்பு இருந்த வெறிக்கு எந்த மூலை இந்தப் பற்று?' என்ற குழப்பமும், வருத்தமும் ஏற்பட்டது.

ஒருநாள் அவளைக் கூப்பிட்டு, "உன் மாமா பிள்ளை கல்யாணத்திற்குப் போய் வா!" என்று கூறி அவளை வலுவிலே பிறந்தகம் அனுப்பி வைத்தான் கணவன்.

'போய் வந்தால் இப்போது தோன்றியிருக்கும் சிறு மன வேற்றுமை நீங்கிவிடும்! கொஞ்சம் பிரிந்திருப்பது நல்லது!' என்ற எண்ணமிட்ட ஜானு, தடைகூறாமல் புறப்பட்டாள்.

புறப்பட்டவேளை எப்படிப்பட்டதோ, ஜானு அப்புறம் கணவனிருக்குமிடம் போகவில்லை.

"உனக்கு நீயே எப்போது உயர்த்தியோ, எனக்கு உன் உறவு வேண்டாம்!" என்று இடித்ததாம், கணவனின் கடிதம்; இவள் வந்த நாலு தினங்களுள் கடிதம் துரத்திக் கொண்டு வந்ததாம்.

ஓரிரண்டு கடிதங்கள், "எனக்கு நீங்கள் தான் உயர்ந்தவர்!" என மன்றாடிக் ஜானு கடிதம் விடுத்தாளாம், பதில் இல்லை அவற்றுக்கு.

"இந்த வேலை வேண்டாமென்று ராஜினாமா செய்துவிட்டுப் போனாரே!" என்று சொன்னார்களாம், எழுதினார்களாம் கணவனின் ஆபீஸ் நண்பர்களும், மற்றவர்களும்.

புக்ககத்தார், "எங்களுக்கும் தெரியவில்லையே!" என்று வேதனையுடன் எழுதியிருந்தார்களாம்!

** ** **

"நீயே சொல் சுசீ! என்ன தவறு, யார் செய்தது தவறு? என்ன விபரீதம் நடந்துவிட்டது!" என்று கேட்டாள் ஜானு.

நான் திகைத்திருந்தேன். இப்படியுமா ஒரு ஆத்மா இருப்பார்! பல காலம் அவளுடன் பழகிவிட்டு, இப்படி ஒன்றுமில்லாததற்கு மனைவியைச் துறப்பாரா?" என்றுதான் திகைப்பு.

"ஜானு! அந்தக் கண்ணாடியும், குடித்தனச் சாமான்களும் என்னவாயின!" என வினவினேன்.

"அந்தக் கூத்தை ஏன் கேட்கிறாய்? என்றாள் ஜானு.

"நான் இங்கே வந்த ஒரு வாரத்திற்குள் அந்தக் கடிதம், அப்புறம் - அடுத்த வாரத்திற்குள் - கண்ணாடியும் இன்னும் சில சாமான்களும் வந்துவிட்டன. அங்கே என் புக்ககத்திற்கும் சில சாமான்கள் வந்தனவாம்! அவர் போன இடம்தான் தெரியவில்லை! ஏன் சுசீ? என்னைமட்டுமல்லாமல் பெற்றோரையும் துறக்கும்படி அப்படி என்ன மனம் விண்டு விரிந்திருக்கும்? அதானே தெரியவில்லை . . கம்பெனி வேலையில் ஒரு அதிருப்தியும் கொண்டிருந்ததாகவும் தெரியவில்லை . . . "

"என்ன அதிசயமோம்மா! . . . போகிறது! எங்கே கண்ணாடியைக் காட்டு!" என்று சொன்னேன்.

"அதை விற்றுத் தொலைத்துவிட்டேன்! எனக்கு அது எதற்கு, இனிமேல்? எனக்குச் சத்துருவாயும் வந்து வாய்த்தது அது! ஆது எனக்கு வேண்டவே வேண்டாம்! கண்ணாடியில் காலையில் எழுந்து கண் விழித்தால் சுபம் என்பார்களே! வருஷப் பிறப்புக்கு 'விஷு'வில் வைப்பார்களே, சுசீ! எனக்கு இது செய்த வினையைப் பாரேன்! . . . . விற்று தலைமுழுகிவிட்டேன்! . . . " என்றாள் ஜானு விரக்தியுடன்.

"எப்போ விற்றாய் ஜானு? அதுதான் துரதிர்ஷ்டம் கொணர்ந்திருந்தால். அது வீட்டைவிட்டு போனப்புறம், ஏன், உன் கஷ்டம் தீர்ந்திருக்க வேண்டாமோ?" என்றேன் நான்.

"நான் நினைத்ததுண்டு ஒரு மாறுதலும் காணோமே என்று! ஆனால் எனக்கு அதை விட்டதில் வருத்தமில்லை. எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று வெகு உறுதியுடனும், அசாத்திய விரக்தியுடனும் கண்ணாடி மீது வெறுப்புடனும் சொன்னாள் ஜானு.

நான் பரிதாபத்துடன் உணர்ந்தேன். அவளுக்கு இத்தகைய விரக்தி மனப்பான்மையும் உறுதியும் எதனால் என்றும், எத்தகைய மனவேதனையினால் ஏற்பட்டது என்றும் உணர்ந்தேன்.

பிறகு வேறொரு சந்தேக நிவர்த்தியும் செய்துகொண்டேன்.

"ஜானு இப்படி இருக்கிறாள்" என்பதை எனக்குச் சொல்லாமல் "ஜானுவும் இருக்கிறாள், இங்கே" என்று என் வீட்டில் என் அன்னை சொன்னது ஏன்?

"'எங்கேயோ வடக்கே வேலையில் இருக்கிறார், வீடு கிடைக்கவில்லை,' என்று அம்மா சொல்லிக் கொள்கிறாள்; அம்மாவும், நானும் மட்டும்தான் இருப்பதால் விஷயம் வெளியாகவில்லை" என்றாள் ஜானு.

"ஏதோ அம்மாவுக்குத் திருப்தியாயிருக்கட்டுமே என்று நானும் துக்கத்தை விழுங்குகிறேன். ஆனால் எனக்கு அதனால் வேதனை அதிகம்தான்!" என ஒத்துக்கொண்டாள் அவள்.

வெற்றுக் கண்ணாடி நன்றாகவேயிருக்கிறது பாதரசப் பூச்சுப் பெற்றுவிட்டால் அதற்கு இன்னும் பெருமையும், சிறப்பும் உயர்வும் உண்டாகின்றன... ஆனால் அப்புறம் அந்தப் பூச்சு அழிந்தும் அழியாமலும் மாறிவிட்டால் கண்ணாடியின் அலங்கோல நிலை? அந்தோ - கணவன் இருந்தும் இல்லாதவளாக அவள் மனங் குமுறியழும் நிலைமையும் - அத்தகையதுதானன்றோ?

அவளிடம் அன்று விடைபெற்றபொழுது என் மனப்பாரம் அளவு கடந்தது. ஆனால் அப்புறம் - பத்து நாட்களுக்குப் பிறகு, நான் அவளிடமும் என் பெற்றோரிடமும் மற்றும்

ஏனையோரிடமும் விடை பெற்று எங்கள் ஊருக்குப் புறப்பட்டபோது - ஏனோ என் மனதில் உவகை! . . .

ஏன்? மறுபடியும் எங்கள் குடித்தனம் நடக்கும் ஊர்போய், ஜோராக இருக்கப் போகிறோம் என்ற உள்ளுணர்வுனாலேதான்! ஏனோ என்னும் ஐயம் எதற்கு?

ஊர் மீளும் வழியிலே நான் என் சிநேகிதியின் சோக அனுபவத்தைச் சொன்னேன் என் கணவருக்கு.

'இந்தப் பத்து நாளிலேயே எனக்கு மறுபடியும் ஊரில் போய் இருக்கமாட்டோமா என்று ஆகிவிட்டதே! பாவம், அவளுக்கு . . . '

இந்த நினைப்புடன் நான் அவருக்கு என் ஜானுவின் வரலாற்றை வெகு உருக்கமாக எடுத்துக்கூறினேன்.

"யாரோ அந்தக் கல்நெஞ்சுக்காரன்! . . . அற்ப விஷயத்தைப் பிரமாதப்படுத்திவிட்டான்! . . . அந்த மகானுபாவன் பெயர் என்னவாம்?" என்று கேட்டார் அவர்.

"ஐயோ!" என்றேன் நான்; அந்த மகானுபாவன் பெயரை விசாரித்து வைத்துக்கொள்ளத் தோன்றாதது ஏனோ ஒரு குற்றம் போல தோன்றிற்று. வீட்டிலே, அங்கே பிறந்தகத்திலேயே, நான் இதுபற்றிச் சொல்லி, அவர் இந்தக் கேள்வி கேட்டிருந்தால், ஜானுவை விசாரித்து இருக்கலாமல்லவா? ஆனால்? யாருக்கும் 'அங்கே' தெரிய வேண்டாம் என்ற என் நல்லெண்ணம் விளைத்த வினையை நினைத்து வருந்தினேன்.

"கல்யாணப் பத்திரிகையிலே என்னமோ ராமன் என்று போட்டிருந்ததாக நினைவு! எங்கே அவ்வளவு நினைவு! ஜானகிராமனோ, கல்யாண ராமனோ, பட்டாபிராமனோ - எத்தனையோ பேர்கள்!" என்று சொன்னேன் அப்புறம்.

"சாப்பாட்டு ராமன்!" என்றார் அவர்.

எனக்கும் சிரிப்பு வந்தாலும் "உங்களுக்கு வேடிக்கையாகத்தான் இருக்கும்!" என்று கோபித்துக்கொண்டேன்.

என் பொய்க் கோபத்தை மெய்க்கோபமாக அவர் பாவிக்காவிடினும், அவர் பாவித்தாரோ அப்படி என்று ஐயுறுமாறுதான் அப்புறம் நடந்து கொண்டார்.

ஊர் சேர்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம், ஒரு நாள் ஒரு செய்தி கொணர்ந்தார்.

"பாலு மகா மோசம்! கலாட்டா செய்யறதை யாரிடம் எப்படி எத்தனை செய்யலாம் என்கிற மிதமே கிடையாது!' என்றார் உடை மாற்றிக்கொண்டே.

பாலு அவருடைய ஆபீஸ் நண்பர். எங்களைப் போலவே வட நாட்டில், உத்தியோகமும் வீடு வாசலும் உள்ளவர்.

நான் என் கணவரின் பேச்சிற்கு "உம்" கொட்டினேன்.

"இன்னிக்குக் கிளப்புலே ஒரு ஆசாமியை பாலு வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டு வந்திருந்தான்! ஏற்கனவே ஒரு மாசமாய் வருவதற்கு இஷ்டமில்லாமல் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி வந்த மனுஷனை, பலவந்தமாய் இழுத்துக்கொண்டு வந்தான்? போகிறது, அதோடு நிற்க வேண்டாமா பெருதனமும், விளையாட்டும்! அந்த மனுஷனை பாவம் ஒரே கலாட்டா பண்ணி அசடு வழிய வச்சுட்டான்!" என்றார் என் கணவர்.

"உம்? அப்படி என்ன கலாட்டா பண்ணினார்? யாரு அவர்?." என்று கேட்டேன் ஆவலுடன்.

"அந்த மனுஷன் இங்கே ஏதோ மோட்டார் கம்பெனிக்கு வேலைக்கு வந்து மூணு மாசமாகிறதாம் பாலுவுக்கு ஒருமாசமாய் பரிச்சயமாச்சாம்! அதுமுதலே கிளப்புக்குக் கூப்பிட்டால் வரவில்லை. கொஞ்ச நாளைக்கு முன்பு "வீடு கிடைச்சு இருக்கே, 'செட்டில்' செய்யுங்களேன் மனைவியை அழைத்துக் கொள்ள!" என்று பாலு சொன்னபோது மனுஷன் அசட்டு விழி விழித்து "உஹும், . . வேண்டாம்! . . . " என்றாராம்! "வீடு கிடைத்தால்

மனைவி வருவாள், வரவழைக்கணும்!" என்று சொன்னவர் இப்படி அசட்டுப் பிசட்டு என்று விழித்ததைப் பார்த்து என்னமோ சந்தேகம் வந்ததாம் பாலுவுக்கு! இன்றைக்கு அவரை கிளப்புக்கு இழுத்துண்டு வந்து என்னென்னமோ கிண்டல் பண்ணி அவர் மானத்தை வாங்கிவிட்டான்! பாவமாயிருந்தது அந்த ஆளைப்பார்க்க!" என்று முடித்தார் என் கணவர்.

"அவர் பேர் என்னவாம்! ஏன் அவரை சும்மா, பாவம், அசடு, அசடுமாதிரி என்று சொல்றேள் நீங்களும்?" என்று கேட்டேன் நான் ஆவல் மீற.

"பாவம், மனுஷன் சாது, கொஞ்சம் சங்கோசப்பிராணி! ஏதோ திகிலோ தயக்கமோ சேர்த்து அசட்டுப்பிசட்டு என்று முழிக்க வைக்கிறது! . . . " என்றார் அவர்.

"அவர் பெயர் என்னவாம், சொல்லுங்களேன்!" என்றேன்

"உஹூம். தெரியாது! . . .நான் கிட்டப்போய் ஒன்றும் பேசலல்லை!" என்றார் அவர். அப்புறம் ஒரு குறும்புப் பார்வையுடன், "ஏன், அந்த ராமனோ என்று சந்தேகப்படுகிறாயோ? சாப்பாட்டு ராமனாகத் தோன்றவில்லை! ஒல்லியாய் உப்னு ஊதினால் எகிறிப் போகிறவராகத்தான் இருக்கிறார்! ரொம்ப இளைப்பு!" என்றார் கணவர்.

"என்னென்னமோ சொல்கிறீர்களே! எனக்கு எல்லா யோசனையும் தோன்றி என்ன பயன்? வீட்டிலே கிடப்பவள் நான்! நீங்கள் கொஞ்சம் யோசனையாய் அந்த ஆசாமி பெயரை விசாரித்து வந்திருக்கக்கூடாதா? நாலுபேருடன் பழகி, நாலு இடத்தில் சுற்றி எத்தனையோ கவனிக்கக்கூடியவர் நீங்கள்! உங்களுக்குக் கொஞ்சம் சிரத்தையோ அங்கலாய்ப்போ இருந்தால், எங்க ஜானுவின் புருஷனைக் கண்டுபிடிக்க முடியாதா? போகிறது, அதுதான் முடியாது; இப்படி பெண்டாட்டி விஷயத்தில் அசந்தர்ப்பப் பேச்சில் மாட்டிக்கொண்ட ஆசாமி அகப்பட்டிருக்கிறாரே, அவரைப் பற்றிக் கொஞ்சம் விசாரிக்கக்கூடாதா? விசாரிக்க முடியாதா? பேஷாக, சிநேக பாவத்தில் நாலும் விசாரிக்க உங்கள் புருஷாளுக்கு என்ன கஷ்டம்! என்னமோ, என் வேதனை, உதவாக்கரை வேதனை!" என அலுத்துக்கொண்டு சொன்னேன் நான்.

எனக்கு நிஜமாகவே ஏனோ அவர் கொணர்ந்த அரை குறைத் தகவல் கேட்டு கோபம் கோபமாக வந்தது.

"அடேய்ப்பா! என்ன கோபம்! அந்த சேதுராமன் கோபத்தையும் தூக்கியடித்துவிடும்போலிருக்கே!" என கூறிச் சிரித்துவிட்டார் அவர். தூக்கிப் போட்டது என்னை.

"என்ன, என்ன, சேதுராமனா? அப்படித்தான் அவள் கல்யாணப் பத்திரிகையிலே பெயர் போட்டிருந்தது போலிருக்கே!' என வியப்புற்றுக் குதித்தெழுந்தேன் நான்.

"என்னென்ன விசாரித்து வந்தீர்கள், சொல்லுங்களேன்!" எனக் கெஞ்சினேன் அவரை.

உண்மையில் அப்போது அவருக்கு வேறு தகவல்கள் தெரிந்திருக்கவில்லை

இரண்டு நாள் கழித்து உத்ஸாகத்துடன் வந்தார்.

அன்றைக்கு மீண்டும் பாலு அந்த மனுஷரை அழைத்து வந்திருந்தார் கிளப்புக்கு. என் கணவர் இரண்டு பேரையும் தனியாகச் சந்தித்து தன் வேலையைத் துவக்கிவிட்டாராம்.

"பாலு! என் மனைவிக்கு ஒரு நிலைக்கண்ணாடி வேணுமாம்! வாங்கணும்! கடைக்கு எப்போ போகலாம்?" என்று பாலுவைக் கேட்டாராம். சேதுராமன் ஒரு மாதிரி துணுக்கமாக தன்னைப் பார்த்துவிட்டு, சமாளித்துக் கொண்டு சும்மாயிருப்பதைக் கவனித்தாராம்.

எப்போதும் என் கணவருடன் கூடமாட எதிலும் நிற்பவர் பாலு, அதனால் "உம், போகலாம், நாளைக்கே!" என்றார் அவர்.

"நீங்களும் வாங்கோ சார்!" என்று சேதுராமனை அழைத்திருக்கிறார் என் கணவர். அடுத்தாற்போல.

"வேண்டாம் சார்!", "வேண்டவே வேண்டாம் சார்!", "எனக்கும் கண்ணாடி சமாசாரத்திற்கும் ரொம்ப தூரம் சார்", என்றெல்லாம் அவர் மூன்று, நான்கு தடவை சொன்ன பிறகு, அதுவரை அவரையும் வரணுமென்று வற்புறுத்திக் கொண்டு வந்த என் கணவர் "ஏன் சார்? பார்த்தால் கண்ணாடிக்கும் உங்களுக்கும்தான் ரொம்ப சம்பந்தம் இருக்கும்போலே எனக்குத் தோன்றுகிறது! . . . அதனால்தான் வரச்சொல்கிறேன்" என்றாராம்.

"அப்படியென்றால்? . . . " என்று மீண்டும் கேட்டாராம் அந்த மனுஷன், பாவம்!

"என் மனைவியின் சிநேகிதி ஜானகி கண்ணாடி வந்தது குடும்ப சுகத்தைக் குலைக்க என்று அதை விற்றுவிட்டு, இப்போது கண்ணாடிப் பேச்சு எடுத்தாலே நடுங்குகிறாளாம்! . . . அதுபோலத்தான் நீங்களும் ஏதாவது வெறுப்பு வைத்திருக்கிறீர்களா கண்ணாடியென்றால்?" என்று என் கணவர் மெல்ல தாக்குதலைத் துவக்கிவிட்டார்!

"என்ன சார்! . . . உங்களுக்கு எப்படித்தெரியும்? . . . " என்று பதறிப்போய்விட்டார் ஆசாமி!

என் கணவரும் பிடியை விடாமல் முடுக்கி முடுக்கி உண்மையைப் பொழிய வைத்துவிட்டார் சேதுராமனிடமிருந்து. அவர் ஜானுவின் புருஷர்தான்.

"ஏன் சார், உண்மையைச் சொல்லுங்கள்! கண்ணாடியை வாங்கிக் கொடுத்துவிட்டு, அதையே சாக்காகக் கூறி, அசல் ராமனைப்போல் 'பிறந்தகத்திற்குக் கல்யாணம் பார்க்கப்போ!' என்று நயமாக அனுப்பி பிறகு . . . " என்று என் கணவர் நேருக்கு நேர் கேட்டுவிட்டதும் சேதுராமன் உண்மை எதுவும் ஒளிக்காமல் கூறிவிட்டாராம்.

"'என்னைவிட கண்ணாடி ஒசத்தியா அவளுக்கு?' என்று கண்ணாடி வாங்கு முன்பே தோன்றிற்று சார்! 'பிறந்தகம் போய் இருந்துவிட்டு வருகிறேன், கண்ணாடி வாங்க கையில் பணம் சேரும்,' என்று அவள் சொன்னபோதே, 'இப்படிச் சொல்கிறாள், நான் ஒண்டியாய்த் திண்டாடுவேன்' என்று நினைக்கிறாளா என்ற மனத்தாங்கல்தான் சார், எனக்கு! போகிறது, ரொம்ப ஆசைப்படுகிறாளே என்று வாங்கிவிட்டேன் ஆனால் அப்புறமும் எனக்கு ஏனோ அந்தக் கண்ணாடி மேலே அருவருப்பு குறையவில்லை! கண்ணாடி எதற்கு, சார்? சொந்த உருவத்தைப் பார்த்துக்கொள்ள! அவளுக்கு கண்ணாடி மேலே மோகம் என்றால் என்ன அர்த்தம் சார்? தன் உருவத்தின் மேலே, தனக்கே மட்டற்ற மோகம், பெருமை என்று அர்த்தம்! 'இப்படி நினைக்கலாமா?' என்று அந்தக் கோபமும் சேர்ந்தது சார் . . . என்னெதிரில் அவள் கண்ணாடிப் பித்தாகி நடந்துகொள்ளாவிட்டாலும், முந்தி அப்படி இருந்தவள்தானே என்று எனக்குப் பிடிக்கவில்லை சார்! . . . எனக்காகத் தவிர்க்கப் பார்க்கிறாளே தவிர, மனதில் அவளுக்குப் பழைய வெறி, தான் தன்னழகு என்ற எண்ணம் இருக்காதா என்று எனக்கு எண்ணம், சார்! அவளுக்குக் கண்ணாடி வெறி போகப் பண்ணனும் என்று தோன்றிற்று சார்! அதனால் அவளைப் பிறந்தகம் அனுப்பிவிட்டு அப்படிக் கடிதமும் எழுதிப்போட்டுவிட்டு, வேலையை விட்டுவிட்டு அந்தக் குடித்தனத்தை கலைத்துவிட்டேன் சார்! எனக்கு தெலுங்கு ஜில்லாவில் வேலைக்கு ஆர்டர் வந்ததும்தான் அவ்வளவும் செய்தேன் .... ஆனால் அங்கே இருந்தாலும் நம் தமிழ் நாட்டுக்குக் கிட்ட இருந்தால் மனசு சாந்தியாய் இருக்கவில்லை என்று, மூன்று மாசத்திற்கு முந்தி இந்தப் பக்கத்துக்கு வந்துவிட்டேன் சார்! . . . என்னமோ என் அப்பா, அம்மாவுக்கும் ஒன்றும் தெரிவிக்கக்கூடாது என்றும் மனதில் பிடிவாதம் இருந்தது சார்! . . . இந்தப் பக்கமே நாடோடியாய் சுற்றுகிறேன்! . . . இப்பத்தான் 'என்னாலே எத்தனை பேர் மனசு புண்பட்டுவிட்டதோ' என்று கவலை வந்தது சார்! பாலு வீடு கிடைச்சிருக்கு என்று சொன்னதிலிருந்து ஆலோசனைதான் - ஆனால் இதற்குள் அவள் மனசு மாறியிருக்குமா என்ற சந்தேகம் சார்! இப்போ . . . "

சேதுராமன் உண்மையைச் சொல்லிவிட்டதும், "ஜானு தற்கொலை பண்ணிக்கொண்டு விட்டாளாமே, ஐயா!" என்று சொல்லி அவரை இன்னும் கொஞ்சம் அழ அடிக்கத்தான் தோன்றிற்றாம் என் கணவருக்கு. ஆனால் அவர் பரிதாபமாய், "சார், சார்" என்று சங்கதிக்கு

ஒரு 'சார்' போட்டுப் பேசவே அவர் மீது அனுதாபம் கொண்டாராம்! ஒரு நல்ல ஏற்பாடு செய்துவிட்டு வந்து சேர்ந்தார்.

ஜானுவை விரைவிலே அழைத்து வந்து குடித்தனம் அமர்த்தி மணவாழ்க்கையைத் தொடரும்படி, சேதுராமனுக்கும் மகிழ்ச்சியூட்டும் அந்த ஏற்பாடுதான் செய்துவிட்டு வந்தார்.

உடனுக்குடனே பேனாவும் கையுமாக, பேப்பரும் மேஜையுமாக அமர்ந்தேன், ஜானுவுக்குக் கடிதம் எழுத.

அந்தக் கண்ணாடியை வாங்கினதும் சந்தோஷித்து பிறகு வருத்தத்திலே மூழ்கிய ஜானுவுக்கும் தமிழ்நாடு போனதும், என் பிறந்தகத்தின் நன்னிலத்தை மிதித்ததும் மகிழ்ச்சியுற்று பிறகு வேதனையிலே மூழ்கிய எனக்கும் அனுபவம் எப்படியிருந்தது? பானகமோ, இளநீரோ என்று ஆவலுடன் எடுத்துக் குடித்த நீர் எட்டிக்காயாக கசக்கும் பண்டமாச்சே என்ற ஏமாற்றமே குடிகொண்டிருந்தது! ஆனால் அந்த கசப்புப் பண்டம் மருந்தாகி நல்லதே செய்ததல்லவோ?

"தமிழ்த்திரு நாடுதனைப் பெற்ற தாயென்று கும்பிடடி!" என முணுமுணுத்தது என் உள்ளம். ஆனால் எழுதினது வேறு.

"என்னதான் தாய்நாடு, தாய்வீடு என்று பெண்கள் உள்ளம் ஆர்ப்பரித்தாலும் அவர்கள் அந்தரங்கம், 'கணவனிருக்குமிடம் சொர்க்கம்!' என்று தானே பறையறைக்கிறது ஜானு! வா! நீயும் என்னைப்போல இங்கே மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்த வா!" என்றுதான் நான் எழுதினேன். என் அந்தரங்கம் எழுதச் சொன்னது.

மாசு மரு நீக்கப்பட்டு புது மெருகு கொண்ட கண்ணாடிபோல் முகம் ஒளிவீச துலங்குகிறாள் ஜானு. அந்த மகிழ்ச்சி ஒளியிலே நாங்கள் 'எங்கள் இருவர்' உருவத்தைப் பார்த்துக் கொள்கிறோம்.

ஆனால் - என் மனதைக் கொள்ளை கொண்டு எனக்குப் பெருமிதம் அளிப்பது - அந்த ஒரு காட்சிதான்.

ஒரு அழகிய புதுநிலைக் கண்ணாடிக்கெதிரே ஜானுவை நிற்க வைத்து அவள் தலையில் தானே பூவைச் செருகிவிட்டுக் கொண்டே, கவிழ்ந்திருக்கும் அவள் முகத்தை கண்ணாடி தனக்குப் பளிச்சென்று எடுத்துக் காட்டுவதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார் சேதுராமன், நான் அங்கு போனபோது!

"வேண்டும்!" என்று அவள் கேட்டு அவர் வாங்கிய அந்தக் கண்ணாடி அளித்த பலனுக்கு நேர்மாறான பலனைத்தான், "வேண்டாம்!" என்று அவள் மன்றாடியும் அவர் வாங்கிவிட்ட இந்தக் கண்ணாடி அளித்து வருகிறது என்பதைச் சொல்லித்தானா அறியலாம்?

"கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டும்!" என்று சொல்லக்கூடியவர்கள் வேணுமானால் நேரில் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்!

'கண்ணாடி ஆசை' செய்த விபரீதத்தை 'ஆசைக் கண்ணாடி' ஓட்டிவிட்டது என்பதைக் கண்டு வியந்து வரலாம்!

ஆனால், நான் பெருமைப்படுவது போல யாரும் பெருமிதப்படமுடியாது!

நான் முன்பு என் கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேடவில்லை. டாக்டரை நாடும்படி இருந்தது! ஆனால், என் தோழி ஜானுவின் வாழ்க்கையில் கண்ணாடி செய்த துன்பத்தை நான் என் கணவரின் ஒத்துழைப்பால் சுவடு தெரியாமல் அகற்றிவிட்டேன்! எனக்குப் பெருமையிராதா?

**********

(சுதேசமித்திரன், மார்ச் 27/ஏப்ரல் 4/1949)